**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.30/2025** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 6** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சாதிக்பாட்ஷா | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **07.04.2026**

**எதிரி காணொளியில் ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

நான் TASMAC சேல்ஸ்மேனாக பணிபுரிகிறேன். காணொளியில் ஆஜராகியுள்ள எதிரியை எனக்கு தெரியாது. நான் சிறுவாச்சூரில் உள்ள TASMACகடையில் சேல்ஸ்மேனாக இருக்கிறேன். எனக்கு வழக்கு சம்மந்தமாக விவரம் தெரியாது. அ.சா.5 ஐ எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் மகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்துக்கள் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

சிறுவாச்சூரில் TASMAC நிறுவனத்தை சேர்ந்த பார் ஒன்று உள்ளது என்றால் சரிதான். 12.02.2024ம் தேதி காலையில் வழக்கு எதிரிகள் அங்கு பணிபுரிவரிடம் தண்ணி போடுவதற்கு பணம் கொடுங்கள் என்று தகராறு செய்தார்கள் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த

வழக்கு சம்மந்தமாக தான் 12.02.2024ம் தேதி எதிரியை கைது செய்து வைத்திருந்தார்கள் என்றும், அப்போது எதிரி கமல்ஹாசனை விசாரித்தபோது என்முன்னிலையில் அவர் ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார்என்றும், அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் படி பணம் ரூ.5000/– மற்றும் கத்தியை போலிசார் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அதில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. அசா.5 எனக்கு தெரியும். அவர் TASMACல் சேல்ஸ்மேனாக இருக்கிறார். அவரும் என்னுடன் சேர்த்து சாட்சி கையெழுத்துபோட்டதாக போலிசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் தொடர் குற்றவாளிகள் என்றும், அவர்களுக்கு பயந்து தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இல்லை.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.